## ஸ்ரீலங்கா ஸ்ரேட் ரேடிங் (ஜெனரல்) கோப்பரேஷன் லிமிட்டட் - 2016/2017

---

ஸ்ரீலங்கா ஸ்ரேட் ரேடிங் (ஜெனரல்) கோப்பரேஷன் லிமிட்டட்டின் (''கம்பனி'') 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இந்த கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்துறையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் மூலம் நான் உதவியைப் பெற்றிருந்தேன்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயற்பாடுகள் மீதான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் வழங்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (“சபை”) பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது அபிப்பிராயத்தில், ஶ்ரீலங்கா ஸ்ரேட் ரேடிங் (ஜெனரல்) கோப்பரேஷன் லிமிட்டட்டின் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது :

- கணக்காய்விற்கு அவசியமானதும், இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுவதும், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றமை போன்ற எல்லா தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றிருக்கின்றேன் என்பதும், மற்றும்

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2015 மே 25 இன் பிஈடீ/1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 2 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக, அலுவலக வாகனங்களுக்கு உரித்துப் பெற்றிராத 21 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது போக்குவரத்துப் படிகளாக ரூபா 3,180,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 3.3 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக, அலுவலக வாகனங்களினைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்ற 2 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது போக்குவரத்துப் படிகளாக ரூபா 480,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. |

(iii) 3.1 மற்றும் 3.2 ஆம் பிரிவுகள் — தலைவர் மற்றும் செயற்பாட்டுப் பணிப்பாளர்க்கு அவர்களின் மாதாந்த எரிபொருள் எல்லைகளினை மிகைத்து மீளாய்வாண்டின் போது ரூபா 728,588 எரிபொருள் செலவினங்கள் மீளளிப்புச்செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றிற்கு எவ்வித அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், முன்னைய ஆண்டின் ரூபா 26,677,844 மிகையுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதிசார் விளைவுகள் ரூபா 39,988,886 மிகையொன்றாகக் காணப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 13,311,042 தொகை அல்லது 49 சதவீத நிதிசார் விளைவுகளில் முன்னேற்றமொன்றினை சுட்டிக்காட்டுகின்றது. விநியோக மற்றும் நிர்வாக செலவினங்கள் முறையே ரூபா 23,902,194 மற்றும் ரூபா 79,337,980 இனால் அதிகரித்திருந்த போதிலும், மொத்த வருமானம் மற்றும் வட்டி வருமானம் முறையே ரூபா 98,370,707 மற்றும் ரூபா 21,172,322 இனால் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதனமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளுக்கான நிதிசார் விளைவுகளினை பகுப்பாய்கையில், 2012/2013 நிதி ஆண்டில் கம்பனியின் வரிக்கு பின்னரான தேறிய இலாபம் ரூபா 66,940,292 தொகையாக காணப்பட்டதுடன் 2013/2014 மற்றும் 2014/2015 நிதி ஆண்டில் தொடர்ச்சியாக குறைவடைந்திருந்ததுடன் அது 2015/2016 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் 2016/2017 ஆம் நிதி ஆண்டில் ரூபா 39,988,886 ஆக மாறியது. நிதிசார் விளைவுகளிற்கு ஊழியர்களின் ஊதியம், அரசின் வரிகள் மற்றும் பெறுமானத்தேய்வினை சீராக்கம் செய்யும் போது, 2012/2013 ஆம் நிதி ஆண்டில் ரூபா 309,547,112 தொகையாகக் காணப்பட்ட கம்பனியின் பங்களிப்பு 2016/2017 ஆம் நிதி ஆண்டில் தளம்பல்களுடன் ரூபா 419,451,510 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டதற்கு இணங்க கம்பனியினால் அடைந்துகொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் பின்வருமாறு.

- பல்வேறுபட்ட பொருட்களின் விற்பனையின் மூலம் சந்தையில் நிலைத்திருத்தல்.
- நாட்டிற்கு வெளியில் சர்வதேச சந்தையில் புகழ்பெற்ற மற்றும் நம்பகரமான வியாபார பெயர்களினை பிரதிநிதித்துவப்படுத்தல்.
- நிறுவனத்தின் வருமானம் மற்றும் இலாபத்தினை மேம்படுத்துவதன் மூலம் கம்பனியின் பெயரினை பரவச்செய்தல்.
- பொது துறையின் தேவைப்பாடுகளினை வினைத்திறனாக பூர்த்திசெய்வதனூடாக அபிவிருத்தி இலக்குகளினை அடைதல்.
- நுகர்வோர்களின் தேவைகளினை பூர்த்திசெய்யும்பொருட்டு முதலீட்டு நடவடிக்கைகளில் கம்பனியின் பெரும்பாண்மையான பொருட்களை அறிமுகப்படுத்துதல்.

- உற்பத்தித்திறனை முன்னேற்றுதல், அரச வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பாக தொடர்ச்சியான கவனத்தை செலுத்துதல்.

விற்பனை வருமானத்தை அதிகரிப்பதன் மூலம் இலாபத்தை அதிகரிப்பது கம்பனியின் நோக்கமொன்றாகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மீளாய்வாண்டில் 27 சதவீதத்தினால் விற்பனை வருமானத்தினை அதிகரிக்க கம்பனிக்கு முடியுமாகவிருந்தது.

**4.2 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கம்பனியின் வளங்கள்**

2003 யூன் 02 இன் பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரவையின் அங்கீகாரமின்றி கம்பனியின் பதவியணியினருக்குச் சொந்தமான பத்து உத்தியோகத்தர்கள் வரிசை அமைச்சிற்கு இணைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் சம்பளங்கள் மற்றும் படிகளாக அவர்களுக்கு ரூபா 2,157,700 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

**4.3 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

கம்பனி தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் காட்டப்பட்ட குறைபாடுகள் தொடர்பில் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் தொடர்பு | | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| | **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| (அ) | 2015/16 | 2.2.1(இ) | நிர்மாண கம்பனியொன்றுக்கு வளிப்பதனாக்கிகளை விநியோகித்தமைக்காக பெறவேண்டிய ரூபா 1,756,220 தொகையொன்று அறவிடப்படாமை. |
| (ஆ) | 2015/16 | 4.3 (ஆ) | விற்பனைக்கு உகந்ததை இனங்காண்டிராது, களஞ்சியத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 75,171,712 பெறுமதியான 35 பட்டுப்பூச்சிக் கூடுகள் (Cocoon) காணப்படுகின்றமை. |

**4.4 பெறுகை செயன்முறை**

சிறு சந்தைகடை மற்றும் அலுவலகமொன்றின் ஸ்தாபிப்பு 2013 நவம்பர் 01 இலிருந்து ரூபா 565,000 மாதாந்த வாடகை அடிப்படையில் கட்டிடமொன்றினை பெற்றுக்கொண்டமை மற்றும் அதன் புனரமைப்புக்கு ரூபா 16,281,285 தொகையொன்று செலவிட்டமை தொடர்பாக தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகை நடைமுறையிலிருந்து விலகி, விநியோகஸ்தர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

(ஆ) கட்டிடத்தினை வாடகைக்கு பெறுவதற்கு உடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும், அது முறையாக தயாரிக்கப்பட்டிருக்காததுடன் காணி பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்படவில்லை.

(இ) 2013 நவம்பரில் வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடம் 2015 நவம்பர் வரை பயன்படுத்தப்பட்டிருக்காத போதிலும் அந்தக் காலப்பகுதியின் போது வாடகையாக ரூபா 13,329,000 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. அதனைத்தொடர்ந்து, காணி உரிமையாளருடனான இணக்கமின்மை காரணமாக கட்டிடத்தை விட்டு வெளியேற தீர்மானிக்கப்பட்டது. ரூபா 2,128,790 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மற்றும் விற்பனை செய்யப்படாத பொருட்களின் இருப்பு அங்கீகாரம் மற்றும் முறையான மதிப்பீடொன்று இன்றி 2016 யூன் 16 இல் ரூபா 1,000,000 இற்கு ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், அது ரூபா 1,128,790 ஆன மொத்தப் பொருட்களின் பெறுமதியினை விடக் குறைவாகக் காணப்பட்டது.

(ஈ) இந்தக்கட்டிடம், 2013 நவம்பரிலிருந்து 10 வருடங்கள் காலப்பகுதியொன்றுக்கு வாடகை அடிப்படையில் பெறப்பட்டு குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்காமையினால், 3 வருடங்களின் பின்னர் 2016 ஆகஸ்ட் இல் கட்டிடத்திலிருந்தது வெளியேற வேண்டியிருந்தது. அதன் விளைவாக, புனர்நிர்மாணத்திற்கு ஏற்பட்ட ரூபா 16,281,285 தொகையிலிருந்து ரூபா 10,630,782 தொகையொன்று இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தமையால் அந்தத் தொகையினால் நிதிசார் நட்டமொன்று கம்பனிக்கு ஏற்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 4.5 ஆளணி நிர்வாகம்

2017 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் முறையே 329 மற்றும் 425 ஆகக் காணப்பட்டிருந்ததுடன் பதவியணியினரில் காணப்பட்ட மிகைகள் மற்றும் பற்றாக்குறை எண்ணிக்கைகள் முறையே 106 மற்றும் 10 ஆகக் காணப்பட்டது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஆட்சேர்ப்புத் திட்டமொன்றிக்கு அங்கீகாரம் பெறப்பட்டிருக்காததுடன் முறையான அங்கீகாரமின்றி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து 106 உத்தியோகத்தர் / ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர்.

(ஆ) உயர் மற்றும் மத்திய மட்ட முகாமைத்துவ பதவிகளில் 10 வெற்றிடங்கள் காணப்படுகின்றமை தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் மேற்பார்வை செயற்பாடுகளில் தாக்கத்தினைச் செலுத்துகின்றது. மீளாய்வாண்டின் இறுதிவரையேனும் அந்த வெற்றிடங்களினை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கம்பனியின் ஸ்தாபிப்பு

1970 இன் 33 ஆம் இலக்க இலங்கை அரச வியாபார கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் கூட்டுத்தாபனமொன்றாக இந்தக் கம்பனி கூட்டிணைக்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் லங்கா ஜெனரல் ரேடிங் கம்பனி லிமிட்டட் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டதுடன் பின்னர் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக 2007 இன் 07 ஆம் இலக்க புதிய கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் ஸ்ரீலங்கா ஸ்ரேட் ரேடிங் (ஜெனரல்) கோப்பரேஷன் லிமிட்டட் என்ற பெயரில் மீள பதிவு செய்யப்பட்டது.

## 5.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களுக்குள் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் வரைபு ஆண்டு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டு அறிக்கை முறையே 2017 செப்தெம்பர் 14 மற்றும் 2018 ஏப்ரல் 27 இல் மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| (அ) | பெறுகை செயற்பாடுகள் | அரச பெறுகை வழிகாட்டல்களுடன் இணங்காமை. |
| (ஆ) | இருப்புக் கட்டுப்பாடு | இருப்பு பேணுகை மற்றும் இருப்பு பதிவுகளில் பலவீனங்கள் காணப்படுகின்றமை. |
| (இ) | கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு | நீண்டகால கடன்பட்டோர்கள் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளினை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஈ) | செயற்பாட்டு மற்றும் நிதிசார் கட்டுப்பாடு | (i) நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நட்டங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.<br>(ii) காணப்படுகின்ற முகாமைத்துவ தகவல் முறைமை நாளது வரையாக்கப்படவில்லை.<br>(iii) மிகை காசு நிலையான வைப்புக்களில் முதலிடப்படுகின்றதுடன் காசு தேவைகளுக்கு குறுங்கால கடன்கள் பெறப்படுகின்றமை. |